# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அரையாண்டுத் தேர்வு

# 2013 - 2014

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 8

சுட்டெண்:............................................................ நேரம்: 180 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. உலகின் முதன் மொழி தமிழே என்று நிறுவியவர்

அ) கணியன் பூங்குன்றனார் ஆ) மறைமலை அடிகள்
இ) தேவநேயப்பாவாணர் ஈ) நாமக்கல் கவிஞர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. தமிழுக்குத் தந்த கனி

அ) நெல்லிக்கனி ஆ) பலாக்கனி
இ) மாங்கனி ஈ) வாழைக்கனி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. பசுமை + தமிழ் என்பதைச் சேர்த்தால்

அ) பைந்தமிழ் ஆ) பசுந்தமிழ்
இ) பசுமைதமிழ் ஈ) பசுமைத்தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. ஐம்பதாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா

அ) வைரவிழா ஆ) வெள்ளிவிழா
இ) பொன்விழா ஈ) பவளவிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. நாளை எங்கள் வீட்டுக்கு வாருங்கள். இச்சொல்லியத்தில் மறைந்து நிற்கும் சொல்லிய உறுப்பு

அ) செயப்படுபொருள் ஆ) பயனிலை
இ) அடைமொழி ஈ) எழுவாய்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. மாறன் பள்ளியிலிருந்து வந்தான். இதில் வரும் வினை முற்று

அ) மாறன் ஆ) இருந்து
இ) பள்ளி ஈ) வந்தான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. கதிர்காமநாயகம் என்ற இரண்டகனால் காட்டிக் கொடுக்கப்பட்ட மன்னன்

அ) எல்லாளன் ஆ) சங்கிலியன்
இ) பண்டாரவன்னியன் ஈ) கயிலைவன்னியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. மரத்திலிருந்து பழம் விழுந்தது. இச்சொல்லியம்

அ) கலப்புச்சொல்லியம் ஆ) தனிச்சொல்லியம்
இ) கூட்டுச்சொல்லியம் ஈ) தொடர்ச்சொல்லியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. கார்காலம் என்பது

அ) கோடை காலம் ஆ) மழை காலம்
இ) இளவேனிற் காலம் ஈ) பனி காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. நாள் தோறும் கீரை உண்ண வேண்டும். இதில் வரும் 'தோறும்' என்ற சொல்

அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல்
இ) இடைச்சொல் ஈ) உரிச்சொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுவது

அ) தை முதலாம் நாள் ஆ) தை இரண்டாம் நாள்
இ) தை மூன்றாம் நாள் ஈ) தை நான்காம் நாள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. முதன் முதலில் தமிழ் மண்ணில் கரும்பைக் கொண்டு வந்து விளைச்சல் செய்த மன்னன்

அ) பாரி ஆ) சேரன்
இ) அதியமான் ஈ) செங்குட்டுவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. காட்டுமல்லிகை என்ற பாடலைப் பாடிய புலவர்

அ) பாரதியார் ஆ) பாவேந்தர்
இ) காளமேகம் ஈ) உருத்திரமூர்த்தி

அ) [ ] ஆ) [ ] இ) [ ] ஈ) [ ]

14. காடும் காடு சார்ந்த இடமும்

அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) மருதம் ஈ) முல்லை

அ) [ ] ஆ) [ ] இ) [ ] ஈ) [ ]

15. பெங்சூற்றர், பைல் கோட்டைகளைக் கட்டியவர்கள்

அ) ஒல்லாந்தர் ஆ) போர்த்துக்கேயர்
இ) ஆரியர் ஈ) ஆங்கிலேயர்

அ) [ ] ஆ) [ ] இ) [ ] ஈ) [ ]

16. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள்

அ) 18 ஆ) 247 இ) 216 ஈ) 30

அ) [ ] ஆ) [ ] இ) [ ] ஈ) [ ]

17. தமிழ் மொழியின் இனிமை கருதி அதற்கு வைக்கப்பட்ட பெயர்

அ) செந்தமிழ் ஆ) பைந்தமிழ் இ) தேன்தமிழ் ஈ) முத்தமிழ்

அ) [ ] ஆ) [ ] இ) [ ] ஈ) [ ]

18. பின்வருவனவற்றுள் பலவின்பால்

அ) மக்கள் ஆ) குதிரைகள் இ) குதிரை ஈ) மாறன்

அ) [ ] ஆ) [ ] இ) [ ] ஈ) [ ]

19. கிறித்தவ இலக்கியங்களில் ஒன்று

அ) திருவருட்பா ஆ) சீறாப்புராணம்
இ) திவ்வியப்பிரபந்தம் ஈ) இரட்சணியயாத்திரீகம்

அ) [ ] ஆ) [ ] இ) [ ] ஈ) [ ]

20. ஊரார் கொடுக்கும் செல்லத்தில் செருக்கொடு மலர்ந்து நின்ற பூ

அ) மல்லிகை ஆ) தாமரை

இ) முல்லை ஈ) அல்லி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. பின்வருவனவற்றுள் சாரியைக்கு எடுத்துக்காட்டு

அ) அத்து ஆ) உறு இ) தோறும் ஈ) ஆன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. மணிமேகலை என்ற காப்பியத்தை எழுதியவர்

அ) சீர்த்தலைச்சாத்தனார் ஆ) நாதகுத்தனார்

இ) திருத்தக்கதேவர் ஈ) இளங்கோவடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. வயற்கரை என்ற சொல்லைப் பிரித்தல்

அ) வயல் + கரை ஆ) வயற்க் + கரை

இ) வயற் + கரை ஈ) வயக் + கரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. ஒல்காப் பெரும் புகழை உடைய நூல் என்று புகழப்படுவது

அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்

இ) மணிமேகலை ஈ) சிலப்பதிகாரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. தேன்மொழி அன்புடன் உணவைப் பரிமாறினாள். இதில் வரும் செயப்படுபொருள்

அ) தேன்மொழி ஆ) உணவை

இ) அன்புடன் ஈ) பரிமாறினாள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. முப்பேரும் பெற்றாயே எனக் காளமேகம் கூறுவது

அ) நீரை ஆ) மோரை இ) காரை ஈ) தயிரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. நெல்லின் இளையது நாற்றுப் போல பனையின் இளையது

அ) வடலி ஆ) பிள்ளை இ) குட்டி ஈ) கன்று

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. எழில் என்பது

அ) அழகு ஆ) கல்வி இ) வீரம் ஈ) அறிவு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. 'அது' என்ற உருபு ஏற்கும் வேற்றுமை

அ) 5ம் வேற்றுமை ஆ) 2ம் வேற்றுமை

இ) 6ம் வேற்றுமை ஈ) 4ம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. புலி உறுமும் அதுபோல் குதிரை

அ) கனைக்கும் ஆ) கத்தும் இ) பிளிறும் ஈ) முழங்கும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

**2 . பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

நாம் எமது எண்ணங்களை வெளியிடவும் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கும் மூல கரணியமாக அமைபவை சொற்களே. நாம் வாழும் உலகைத் தெளிவாகவும் நுணுக்கமாகவும் அறிந்து கொள்வதற்குச் சொற்கள் அகத்தியமானவை. நாம் கண்ணால் காணும் பொருட்களுக்கும் கருத்தால் உணரும் பொருட்களுக்கும் பெயரிட்டு அவற்றை நினைவில் வைத்திருக்கின்றோம். செய்யும் செயல்களை எல்லாம் சொற்களாலே தான் குறிக்கின்றோம். ஒரு மொழியில் அதிகளவு சொற்கள் இருக்கும் போதுதான் அம்மொழி வளமுள்ள மொழியாகக் கருதப்படும். மக்களின் நாகரிக வளர்ச்சிக்கேற்பவே அவர்களது தாய் மொழியின் சொல்வளமும் அதிகரிக்கும். உலகில் முதல் தோன்றிய மொழியாகவும் உலகின் வளம் மிகுந்த மொழிகளில் ஒன்றாகவும் எமது தாய் மொழியாகிய தமிழ் அமைந்திருக்கிறது. அத்துடன் அற இலக்கியங்கள், புற இலக்கியங்கள், அக இலக்கியங்கள், ஐம்பெருங் காப்பியங்கள் போன்ற பல சிறந்த இலக்கிய வளங்களைக் கொண்டதாகவும் எமது தமிழ் மொழி திகழ்கின்றது. எமது தமிழ் மொழிக்கு உலகம் போற்றும் பொதுமறையாகத் திகழும் திருக்குறளும் பெருமை சேர்க்கின்றது.

1. ஒரு மொழி எப்போது வளமுள்ள மொழியாகக் கருதப்படும்?

   ______________________________________________

   ______________________________________________

2. எதற்கேற்ப சொல்வளம் அதிகரிக்கும்?

   ______________________________________________

   ______________________________________________

3. எமது எண்ணங்களை வெளியிடவும் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கும் மூல காரணியமாக இருப்பவை எவை?

   ______________________________________________

   ______________________________________________

4. தமிழில் உள்ள சிறந்த இலக்கியங்கள் இரண்டைத் தருக?

5. எமது மொழிக்குப் பெருமை சேர்ப்பது எது?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. பண்டாரவன்னியனுடன் தொடர்புடைய ஊர்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

2. காட்டு மல்லிகை எப்போது எங்கே மலர்ந்தது?

3. தமிழகத்தில் ஆங்கிலேயருக்கு எதிராகப் போர் புரிந்து வீரச்சாவடைந்த வீரர்கள் யார்?

4. அதியமான் ஔவையாருக்கு நெல்லிக் கனியின் சிறப்பை முதலில் கூறாதது ஏன்?

5. பத்துப்பாட்டு எட்டுத் தொகை நூல்கள் எக் கழகக் காலத்துக்குரியவை?

6. 'சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா' எனத் தொடங்கும் செய்யுளைப் பாடியவர் யார்?

7. தமிழர் ஆண்டுப் பிறப்பாக எந்நாளைக் கொண்டாடுவர்?

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொல்லைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை ஆக்குவோம்.**

## தாயகம்

| நாம் | அதனை | மாட்டோம் | தாயகம் | சேர்ந்து |
|---|---|---|---|---|

எங்கள் ______________________ தமிழீழம் என்பதை

என்றும் ______________________ மறவோம்

கண் போல் ______________________க் காத்திடுவோம் - எதிரி

கைகளில் அதை நாம் விட ______________________

ஒன்றாய்ச் ______________________ நாம் எழுவோம்

ஒற்றுமையாய் அதை மீட்டிடுவோம்.

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1) வேற்றுமைகள் எத்தனை? ஐந்தாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை என்பன இடம்பெறுமாறு ஒவ்வொரு சொல்லியம் தருக.

______________________________________________

______________________________________________

2) பின்வரும் மரபுத் தொடர்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக?

பாடிப்பாடி ______________________________________________

______________________________________________

ஈனஇரக்கம் ______________________________________________

______________________________________________

3) ஆகு பெயர்கள் எத்தனை? இடவாகுபெயர், சினையாகு பெயர் ஒவ்வொன்றுக்கும் ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________________________

இடவாகுபெயர் ______________________________________________

சினையாகு பெயர் ______________________________________________

4) பொருள் தருக.

பார் ______________________ கேளிர் ______________________

வைதல் ______________________ ஆய்ச்சியர் ______________________

கோட்டான் ______________________ ஆசுகவி ______________________

5) கூட்டுச் சொல்லியம், கலப்புச் சொல்லியம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக.

கூட்டுச் சொல்லியம் :- ______________________________

______________________________

கலப்புச் சொல்லியம் :- ______________________________

______________________________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**கோடைகாலம் எல்லோருக்கும் பிடித்த காலம். இக்காலத்தில் மரங்களில் இலைகள் நிறைந்து இருக்கும். பல வண்ணப் பூக்கள் பூத்திருக்கும். சிறுவர்கள் கடற்கரைக்குச் சென்று மணல் வீடு கட்டி விளையாடுவர். பூங்காவிற்குச் சென்று ஊஞ்சல் ஆடி மகிழ்வர். இக்காலம் சிறுவர்களுக்கு மகிழ்ச்சியான காலம்.**

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ பண்டாரவன்னியன்

★ காளமேகப் புலவர்

★ நீர் பார்த்து மகிழ்ந்த ஒரு காட்சி

புள்ளிகள் 20